# 5

# காயீனும் ஆபேலும் சோதிக்கப்படுதல்!

### (Patriarchs and Prophets, pp. 71–79)

### ஆதியாகமம் 4:1–15

ஆதாமின் பிள்ளைகளான காயீனும் ஆபேலும் குணத்தில் வெகுவாக வேறுபட்டிருந்தனர். தேவனுக்கு விசுவாசமாயிருக்கிற ஆவியை ஆபேல் கொண்டிருந்தான். சிருஷ்டிகர் விழுந்துபோன இனத்தை நடத்தினவிதத்தில் அவன் நீதியையும் இரக்கத்தையும் கண்டு, மீட்பின் நம்பிக்கையை நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டான். ஆனால் காயீன் கலகத்தின் ஆவியைப் போற்றி, ஆதாமின் பாவத்தினிமித்தம் பூமியின்மீதும் மனித இனத்தின்மீதும் கொடுக்கப்பட்ட சாபத்திற்காக தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தான். சுயத்தை உயர்த்துகிற வாஞ்சையில் திளைப்பதும், தெய்வீக நீதியையும் அதிகாரத்தையும் கேள்விகேட்கிறதுமான சாத்தானுடைய விழுகைக்கு நடத்தின அதே வழியில் தன் மனதை ஓட அவன் அனுமதித்தான். (1)

அவர்களுக்கு முன்னதாக ஆதாம் சோதிக்கப்பட்டதைப்போலவே, தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிவார்களோ என்று இந்த சகோதரரும் சோதிக்கப்பட்டனர். மனிதனுடைய இரட்சிப்பிற்காக உண்டாக்கப்பட்டிருந்த ஏற்பாட்டோடு அவர்கள் அறிமுகமாகியிருந்து, தேவன் நியமித்திருந்த காணிக்கை முறைகளை புரிந்திருந்தனர். இந்த காணிக்கைகளின் வழியாக அவைகள் அடையாளப்படுத்தின இரட்சகரில் விசுவாசத்தைக் காட்டவேண்டுமென்றும், அதேநேரத்தில் மன்னிப்பிற்காக முற்றிலும் அவரைச் சார்ந்திருப்பதை அறிக்கையிடவேண்டும் என்றும் அறிந்திருந்தனர். தங்களுடைய மீட்பிற்காக தெய்வீகத் திட்டத்தோடு இவ்விதமாக இணைந்து போவதினால், தேவனுடைய சித்தத்திற்கான தங்களுடைய கீழ்ப்படிதலுக்கு அவர்கள் சான்று கொடுக்கிறார்கள் என்பதையும் அறிந்திருந்தனர். இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. தங்களுடைய மந்தையில் முதற்பிறப்பை பலியாகக் கொடுப்பதன்மூலம்,

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பாவநிவாரணமாக கிறிஸ்துவின் இரத்தம் இருக்கிறது என்பதிலிருக்கும் தங்களுடைய விசுவாசத்தை அவர்கள் காண்பிக்கவேண்டும். இதைத்தவிர்த்து பூமியின் முதல் கனிகளும் தோத்திர காணிக்கையாக ஆண்டவர் முன்பாக வைக்கப்படவேண்டும். (2)

இரண்டு சகோதரர்களும் ஒன்றுபோல தங்களுடைய பலிபீடங்களைக் கட்டி, ஒவ்வொருவரும் ஒரு காணிக்கையைக் கொண்டுவந்தார்கள். ஆபேல் ஆண்டவருடைய நியமத்துக்கு இசைவாக மந்தையிலிருந்து ஒரு பலியைக் கொண்டுவந்தான். "ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்." வானத்திலிருந்து அக்கினி தோன்றி காணிக்கையை பட்சித்துப்போட்டது. ஆனால் காயீன் தேவனுடைய நேரடியான வெளிப்படையான கட்டளையை கருத்தில் கொள்ளாமல், வெறும் பழங்களைக் காணிக்கையாக கொண்டுவந்தான். அது ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான எந்த அடையாளமும் வானத்திலிருந்து உண்டாகவில்லை. தெய்வீகம் கற்பித்தவிதமாக தேவனை அணுகவேண்டுமென்று ஆபேல் தன் சகோதரனை மன்றாடினான். ஆனால் அவனுடைய மன்றாட்டுகள் அவனுடைய சொந்த சித்தத்தை செயல்படுத்த அவனை அதிக தீர்மானமுள்ளவனாக்கிற்று. மூத்தவனாக, தான் தன் சகோதரனால் போதிக்கப்படுவதற்கும் மேலாக இருப்பதாக எண்ணி அவனுடைய ஆலோசனையை இகழ்ந்தான். (3)

காயீன் வாக்குப்பண்ணப்பட்டிருந்த தியாகபலியின்மீதும் பலி காணிக்கையின் அவசியத்தின்மீதும் தன் இருதயத்தில் நம்பிக்கையற்றவனாக முறுமுறுப்போடு வந்தான். அவனுடைய காணிக்கை பாவத்தைக்குறித்த எந்த மனவருத்தத்தையும் வெளிக்காட்டவில்லை. தேவன் குறிப்பிடுகிற மிகச் சரியான திட்டத்தைப் பின்பற்றுவது நம்முடைய பெலவீனத்தை ஒத்துக்கொள்வதைப்போன்றது என்றும், நம்முடைய இரட்சிப்பிற்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இரட்சகரின் பாவநிவிர்த்தியையே முற்றிலும் நம்பி ஒப்படைப்பதைப்போன்றது என்றும் இன்று அநேகர் உணருவதைப்போல அவனும் உணர்ந்தான். சுயத்தைச் சார்ந்திருக்கும் முறையை அவன் தெரிந்துகொண்டான். அவன் தன்னுடைய சொந்த நன்மையைக் கொண்டுவருவான். அவன் ஆட்டுக்குட்டியைக் கொண்டுவரமாட்டான். அதன் இரத்தத்தை தன்னுடைய காணிக்கையோடு கலக்கமாட்டான். மாறாக, தன்னுடைய கனிகளை, தன் உழைப்பின் பலன்களைக் கொடுப்பான். அவன் தன்னுடைய காணிக்கையை தேவனுக்குச் செய்யும் உபகாரமாக நினைத்து, அதின் வழியாக தெய்வீக அங்கீகாரத்தை அடையவேண்டுமென்று எதிர்பார்த்தான். ஒரு பலிபீடத்தை உண்டாக்குவதில் காயீன் கீழ்ப்படிந்தான். ஒரு பலியைக் கொண்டுவருவதில் கீழ்ப்படிந்தான். ஆனால் அவன் ஒரு

பகுதியே கீழ்ப்படிந்திருந்தான். ஒரு மீட்பரின் அவசியத்தை உணர்த்தும் அத்தியாவசியமான பகுதி விடப்பட்டிருந்தது. (4)

பிறப்பையும் மார்க்கபோதனைகளையும் கருத்தில் கொள்ளும்போது. இந்த சகோதரர்கள் சமமாகவே இருந்தனர். இருவருமே பாவிகள்; பக்தி செலுத்தவும் ஆராதிக்கவும் வேண்டுமென்கிற தேவனுடைய கோரிக்கைகளை இருவரும் ஒப்புக்கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட இடம்வரை வெளித்தோற்றத்திற்கு அவர்களுடைய மார்க்கம் ஒன்றாகவே இருந்தது. அதைத் தாண்டி அவ்விருவருக்குமிருந்த வேற்றுமை மகா பெரியதாக இருந்தது. (5)

“விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்” (எபி. 11:4). மீட்பின் மாபெரும் கொள்கைகளை ஆபேல் பற்றிக்கொண்டான். தன்னை ஒரு பாவியாக அவன் பார்த்தான். பாவமும் அதன் விளைவாகிய மரணமும் தன் ஆத்துமாவிற்கும் தேவனோடுள்ள உறவிற்கும் இடையே நிற்பதைக் கண்டான். அவன் அடிக்கப்பட்ட பலியை, பலியாக்கப்பட உயிரைக் கொண்டுவந்ததால், மீறப்பட்ட பிரமாணத்தின் கோரிக்கைகளை ஒப்புக்கொண்டான். சிந்தப்பட்ட இரத்தத்தின் வழியாக எதிர்கால பலியான கிறிஸ்து கல்வாரியின் சிலுவையில் மரிப்பதைக் கண்டான். செய்யப்படவிருக்கிற பாவநிவிர்த்தியை நம்பினதால், நீதிமான் என்ற சாட்சியை அடைந்தான். அவனுடைய காணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. (6)

ஆபேலைப்போலவே இந்த சத்தியங்களைக் கற்று ஏற்றுக்கொள்ளும் அதே சந்தர்ப்பம் காயீனுக்கும் இருந்தது. தன்னிச்சையான நோக்கத்திற்கு அவன் பலியாகவில்லை. ஒரு சகோதரன் ஏற்றுக்கொள்ளப்படவும், மற்றவன் நிராகரிக்கப்படவும் தெரிந்துகொள்ளப்படவில்லை. ஆபேல் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் தெரிந்துகொண்டான். காயீன் அவிசுவாசத்தையும் கலகத்தையும் தெரிந்துகொண்டான். இங்கேதான் அனைத்துக் காரியமும் இருக்கிறது. (7)

உலகத்தின் இறுதிவரையிலும் இருக்கப்போகிற இரண்டு கூட்டத்தினரை காயீனும் ஆபேலும் எடுத்துக்காட்டுகிறார்கள். ஒரு வகுப்பார் பாவத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிற பலியை உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். அடுத்த வகுப்பார், தங்கள் நற்கிரியைகளைச் சார்ந்து இருக்கும்படி துணிகரங்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பலி தெய்வீக மத்தியஸ்தத்தின் நன்மை இல்லாத ஒரு பலி. எனவே, அதினால் மனிதனை தேவனுடைய விருப்பத்திற்குள் கொண்டுவர முடியவில்லை. கிறிஸ்துவின் தகுதியினால் மாத்திரமே நம்முடைய மீறுதல்கள் மன்னிக்கப்பட முடியும்.

கிறிஸ்துவின் இரத்தம் அவசியமில்லை என்று உணருகிறவர்கள், தெய்வீக கிருபை இல்லாத, தங்களுடைய சொந்த கிரியைகளாலேயே தெய்வீக அங்கீகாரத்தைப் பெறமுடியும் என்று உணருகிறார்கள். காயீனைப்போல அதே தவறைச் செய்கிறார்கள். சுத்திகரிக்கும் இரத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லையெனில் அவர்கள் ஆக்கினையின்கீழ் இருக்கிறார்கள். பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்படவேறு எந்த ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. (8)

காயீனுடைய உதாரணத்தைப் பின்பற்றி, தொழுகைசெய்யும் வகுப்பார் உலகத்தில் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். மனிதன் இரட்சிப்பிற்காக தன் சொந்த முயற்சியை நம்பியிருக்கலாம் என்கிற அதே கொள்கையின் அடிப்படையில், ஏறக்குறைய அனைத்து மதங்களும் இருக்கின்றன. மனித இனம் மீட்பின் தேவையிலல்ல, வளர்ச்சியின் தேவையிலிருக்கிறது. அது சுத்திகரித்து, உயர்த்தி, தன்னை புதுப்பித்துக்கொள்ளும் என்று சிலரால் உரிமைபாராட்டப்படுகிறது. பலியின் இரத்தமில்லாத காணிக்கையினால் தெய்வீக தயவை பெற்றுக்கொள்ள காயீன் நினைத்ததைப்போல இவர்களும் பாவநிவிர்த்தி இல்லாமல் மானிடத்தை தெய்வீகத் தரத்திற்கு உயர்த்த எதிர்பார்க்கிறார்கள். விளைவு என்னவாயிருக்கும் என்று காயீனுடைய சரித்திரம் காண்பிக்கிறது. கிறிஸ்து இல்லாமல் மனிதன் என்னவாக முடியும் என்று அது காண்பிக்கிறது. தன்னை புதுப்பித்துக்கொள்ள மானிடத்திற்கு ஒரு வல்லமையும் கிடையாது. அது மேல்நோக்கி, தெய்வீகத்தை நோக்கியல்ல, கீழ்நோக்கி, சாத்தானியத்தை நோக்கிச் செல்லுகிறது. கிறிஸ்து மாத்திரமே நமது ஒரே நம்பிக்கை. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"–அப். 4:12. (9)

கிறிஸ்துவை சார்ந்திருக்கும் உண்மையான விசுவாசம் தேவனுடைய கோரிக்கைகளுக்கெல்லாம் கீழ்ப்படிவதன்மூலம் வெளிக்காட்டப்படும். ஆதாமின் காலத்திலிருந்து இன்றுவரை மாபெரும் போராட்டம் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதைப்பற்றியே இருக்கிறது. அவருடைய கட்டளைகள் சிலவற்றை கருத்தில் கொள்ளாதபோதும், தேவனுடைய தயவைப்பெறும் சுதந்திரம் தங்களுக்கு இருப்பதாக உரிமைபாராட்டும் நபர்கள், எல்லா காலங்களிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் கிரியைகளினாலே "விசுவாசம் பூரணப்படுகிறது." கீழ்ப்படியும் கிரியையில்லாதபோது, "விசுவாசம் செத்தது" (யாக்கோபு 2:22,17) என்று வேதாகமம் அறிவிக்கிறது. தேவனை "அறிந்திருக்கிறேனென்று சொல்லியும்,

அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை”–1 யோவான் 2:4. (10)

தன்னுடைய காணிக்கை நிராகரிக்கப்பட்டதை காயீன் கண்டபோது, ஆண்டவர்மேலும் ஆபேல்மேலும் அவன் கோபங்கொண்டான். தெய்வீகம் நியமித்த பலியின் இடத்தில் மனுஷன் பொருத்தினதை தேவன் ஏற்றுக்கொள்ளாததால் கோபங்கொண்டான். தேவனுக்கு எதிராக கலகம் செய்ய தன்னோடு சேருவதை விடுத்து, அவருக்குக் கீழ்ப்படியத் தெரிந்துகொண்டதாலும் தன் சகோதரன்மீதும் கோபங்கொண்டான். தெய்வீக கட்டளையை காயீன் கருத்தில் கொள்ளாதபோதும் தேவன் அவனை அப்படியே விட்டுவிடவில்லை. மாறாக, தன்னை காரணமற்றவனாக காட்டிக்கொண்ட மனிதனோடு நியாயத்தைப் பேசும்படியாக அவர் இறங்கினார். ஆண்டவர் காயீனை நோக்கி: “உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?” என்றார். “நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்” என்று ஒரு தேவதூதன் மூலமாக தெய்வீக எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. தெரிந்துகொள்ளுதல் காயீனிடமே இருந்தது. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இரட்சகரின் தகுதியை நம்பி, அவருடைய கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்தால், அவன் அவருடைய தயவை அனுபவிப்பான். மாறாக, அவிசுவாசத்திலும் மீறுதலிலும் நிலைப்பானேயாகில் குற்றப்படுத்த அவனுக்கு எந்த ஒரு இடமும் இருக்காது. ஏனெனில் அவன் ஆண்டவரால் நிராகரிக்கப்பட்டிருந்தான். (11)

ஆனால் தன்னுடைய தவறை ஒப்புக்கொள்ளுவதற்குப்பதிலாக, தேவன் அநீதி செய்ததாகக் குற்றப்படுத்துவதிலும் ஆபேலின்மேல் பொறாமையையும் வெறுப்பையும் போற்றுவதிலும் காயீன் தொடர்ந்தான். அவன் கோபமாக தன் சகோதரனை நிந்தித்தான். தேவன் அவர்களிடம் நடந்துகொண்டதைக்குறித்த விவாதத்திற்கு அவனை இழுக்க முயற்சித்தான். சாந்தத்தோடு, என்றாலும் பயமின்றியும் உறுதியாயும் தேவனுடைய நீதிக்கும் நற்குணத்திற்கும் ஆபேல் ஆதரவு கொடுத்தான். காயீனுடைய தவறை சுட்டிக்காட்டி, தவறு அவனிடமிருக்கிறதை அவனுக்கு உணர்த்த முயற்சித்தான். தங்களுடைய பெற்றோரை உடனடி மரணத்தைக்கொடுத்து தண்டித்திருக்கலாம் என்கிறபோது, அப்படியல்லாது அவர்களுடைய ஜீவனை தப்பிக்கவைத்த தேவனுடைய மன உருக்கத்தை அவன் சுட்டிக்காட்டி, தேவன் அவர்களை நேசிப்பதாகவும், இல்லாதிருந்தால் தம்முடைய குற்றமற்ற பரிசுத்த குமாரனை தாங்கள் சம்பாதித்த தண்டனையை சகிக்கும்படி கொடுத்திருக்கமாட்டார் என்றும் வலியுறுத்தினான். இவையெல்லாம் காயீனுடைய கோபத்தைக் கொந்தளிக்கச் செய்தது. அறிவும் மனமும் ஆபேல் செல்லுவது சரி

என்று அவனிடம் சொல்லியது. ஆனால் வழக்கமாக அவனுடைய ஆலோசனையை கேட்கிறவன் இப்போது அவனோடு ஒத்துப்போகாமல் இருப்பதாலும், அவனுடைய கலகத்தில் பரிதாபத்தை சம்பாதிக்கமுடியாமல் போனதாலும் அவன் வெகுண்டான். தன் உணர்ச்சியின் சீற்றத்தில் அவன் தன் சகோதரனைக் கொன்றான். (12)

ஆபேல் செய்த எந்த தவறினிமித்தமும் காயீன் தன் சகோதரனை வெறுத்து கொலை செய்யவில்லை. மாறாக, "தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளும ாயிருந்ததினிமித்தந்தான்" (1 யோவான் 3:12). கொலை செய்தான். இவ்வாறாக, எல்லா காலத்திலும் துன்மார்க்கர் தங்களைக்காட்டிலும் மேன்மையாக இருந்தவர்களைப் பகைத்திருக்கிறார்கள். ஆபேலுடைய கீழ்ப்படிதலும் அசையாத விசுவாச வாழ்க்கையும் காயீனுக்கு நிலையான கண்டனமாக இருந்தது. "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்"– யோவான் 3:20. தேவனுடைய ஊழியக்காரருடைய குணத்திலிருந்து எவ்வளவு பிரகாசமாக பரலோக வெளிச்சம் பிரதிபலிக்கப்படுகிறதோ, அவ்வளவு தெளிவாக, தேவபக்தியற்றோரின் பாவங்கள் வெளிப்படுகிறது. தங்களுடைய சமாதானத்தை பாதிக்கிறவர்களை அழிக்க அவர்கள் எடுக்கும் முயற்சிகளும் அவ்வளவு அதிக தீர்மானமானவைகளாக இருக்கும். (13)

சர்ப்பத்துக்கும் ஸ்திரியின் வித்துக்குமிடையே—சாத்தானுக்கும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும், கிறிஸ்துவுக்கும் அவரது பின்னடியார்களுக்குமிடையே இருக்கும் என்று தேவன் அறிவித்த பகையின் முதல் உதாரணமாக, ஆபேலின் மரணம் இருந்தது. மனிதனுடைய பாவத்தினால் சாத்தான் மனித இனத்தின்மேல் கட்டுப்பாட்டைப் பெற்றான். ஆனால் அந்த நுகத்தை வீசியெறிய கிறிஸ்து அவர்களைத் தகுதிப்படுத்துவார். தேவ ஆட்டுக்குட்டியின்மேலிருக்கும் விசுவாசத்தினால் ஒரு ஆத்துமா பாவத்துக்கு ஊழியஞ்செய்வதை விட்டுவிடுகிறபோதெல்லாம் சாத்தானுடைய கோபம் தூண்டப்படுகிறது. தேவனுடைய பிரமாணத்தை மனிதனால் கைக்கொள்ள முடியாது என்ற சாத்தானுடைய வாதத்திற்கு எதிராக ஆபேலின் பரிசுத்த வாழ்க்கை சாட்சிபகர்ந்தது. காயீன் பொல்லாங்கனுடைய ஆவியால் அசைக்கப்பட்டபோது தான் ஆபேலை கட்டுப்படுத்தமுடியாது என்று கண்டு—வெகுண்டு, அவனுடைய உயிரை அழித்தான். தேவனுடைய பிரமாணத்தின் நீதியை மெய்ப்பித்துக் காட்ட யார் நின்றாலும், அப்போதெல்லாம் அவர்களுக்கு எதிராக அதே ஆவி வெளிக்காட்டப்படும். காலங்கள் நெடுகிலும் சீஷர்களுக்கு விறகு அடுக்கி

நெருப்பூட்டின ஆவி அது. ஆனால் இயேசுவின் பின்னடியார்கள்மேல் குவித்த கொடுமைகளோ, தங்களுடைய கட்டுப்பாட்டிற்கு அர்ப்பணிக்க அவர்களை கட்டாயப்படுத்த முடியாததால், சாத்தானாலும் அவனுடைய சேனையாலும் தூண்டப்பட்டவை. இது வெற்றிகொள்ளப்பட்ட சத்துருவின் உக்கிரம். இயேசுவுக்காக மரித்த இரத்தசாட்சிகள் ஒவ்வொருவரும் வெற்றி கொண்டவர்களாக மரித்தனர். “மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பை) ஜெயித்தார்கள்” (வெளி. 12:11,9). என்று தீர்க்கதரிசி சொல்லுகிறான். (14)

கொலைகாரனான காயீன் அவனுடைய குற்றத்திற்காக பதில் கொடுக்க விரைவாக அழைக்கப்பட்டான். “கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்.” காயீன் பாவத்தில் அதிக தூரம் சென்றிருந்ததால், நிலையாக இருக்கிற தேவனுடைய சமூகத்தையும் அவருடைய மேன்மையையும் ஞானத்தையும் குறித்த உணர்வை இழந்திருந்தான். எனவே தன்னுடைய குற்றத்தை மறைக்க பொய்யை நாடினான். (15)

மீண்டும் ஆண்டவர் காயீனிடம்: “என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது” என்றார். தன்னுடைய குற்றத்தை அறிக்கையிட தேவன் காயீனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார். அதை உணர்ந்துபார்க்க அவனுக்கு நேரம் இருந்தது. அவன் செய்த செய்கையின் பெருங்கொடுமையையும் அதை மறைக்க அவன் சொன்ன பொய்யையும் அவன் அறிந்திருந்தான். என்றாலும் இன்னமும் அவன் கலகக்காரனாயிருந்தான். தீர்ப்பு அதிகநேரம் தள்ளிவைக்கப்படவில்லை. மன்றாட்டோடும் அறிவுரைகளோடும் கேட்கப்பட் டிருந்த தெய்வீக குரல்: “இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்” என்கிற பயங்கரமான வார்த்தைகளைப் பேசியது. (16)

காயீன் தன்னுடைய குற்றத்தினால் மரண தீர்ப்பைச் சம்பாதித்திருந்தபோதும் இரக்கமுள்ள சிருஷ்டிகர் அவனுடைய உயிரை தப்பவிட்டு, மனந்திரும்புவதற்கான சந்தர்ப்பத்தை அவனுக்கு வழங்கினார். ஆனால் காயீன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தவும், தெய்வீக

அதிகாரத்திற்கு எதிராகக் கலகத்தைத் தூண்டிவிடவும், தைரியமான—கைவிடப்பட்ட பாவிகளின் தலைவனாயிருக்கவுமே வாழ்ந்தான். இந்த ஒரு துரோகி சாத்தானால் நடத்தப்பட்டு, மற்றவர்களை சோதிக்கிறவன் ஆனான். பூமி மிகவும் கெட்டுப்போய் அதன் அழிவை அழைக்கும் அளவு கொடுமையினால் நிரம்பும்வரை அவனுடைய உதாரணமும் செல்வாக்கும் ஒழுக்கத்தைக் கெடுக்கும் தங்களுடைய வல்லமையை செலுத்தியது. (17)

முதல் கொலைகாரனுடைய உயிரைத் தப்பவிட்டதில் மாபெரும் போராட்டத்தைக்குறித்த ஒரு பாடத்தை அண்டசராசரத்தின்முன் தேவன் வழங்கினார். தேவனுக்கு எதிரான கலகத்தைச் செய்ய பாவியை எந்நாளும் பிழைக்க அனுமதித்தால் அதன் விளைவு எப்படியாக இருக்கும் என்பதற்கு காயீன் மற்றும் அவனுடைய சந்ததியினரின் இருண்ட சரித்திரம் ஒரு விளக்கமாக இருந்தது. தேவனுடைய பொறுமை துன்மார்க்கனை தன்னுடைய அக்கிரமத்தில் அதிக தைரியமுள்ளவனாகவும் இணக்கமற்றவனுமாகவே ஆக்குகிறது. காயீன்மேல் அந்தத் தீர்ப்பு சொல்லப்பட்டு, பதினைந்து நூற்றாண்டுகள் கடந்தபிறகு, அவனுடைய உதாரணம் மற்றும் செல்வாக்கின் கனிகளை குற்றத்திலும் பூமியை மூழ்கடித்த கேட்டிலும் பிரபஞ்சம் சாட்சியாகக் கண்டது. தேவனுடைய பிரமாணத்தை மீறியதால் விழுந்துபோன இனத்தின்மேல் அறிவிக்கப்பட்ட மரணத்தீர்ப்பு, நீதியும் இரக்கமுமானது என்பது வெளியாக்கப்பட்டது. மனிதன் பாவத்தில் அதிக காலம் ஜீவித்து அகிக கட்டுப்பாடற்றவன் ஆனான். கட்டுப்படாத அக்கிரம செய்கையை குறுக்கி, கலகத்தில் கடினப்பட்டுப்போனவர்களின் தாக்கத்திலிருந்து உலகத்தை விடுவித்த தெய்வீகத்தீர்ப்பு சாபத்தைவிடவும் ஆசீர்வாதமாக இருந்தது. (18)

தேவனுடைய ஆட்சியின் குணத்தைத் தவறாக காண்பிக்கும்படி ஆயிரக்கணக்கான மாறுவேடங்களில் சாத்தான் தீவிரமாக, ஆற்றலோடு நிலையாக வேலைசெய்துகொண்டிருக்கிறான். விரிவாக்கப்பட்ட முறையாக அமைக்கப்பட்ட திட்டங்களுடனும், அற்புதமான வல்லமையுடனும் உலகமக்களை தன்னுடைய வஞ்சகத்தின்கீழ் வைத்திருக்க அவன் உழைக்கிறான். சர்வ ஞானமும் நித்தியமுமான தேவன், துவக்கத்திலிருந்து முடிவை பார்க்கிறார். தீமையை கையாண்டதில் அவருடைய திட்டங்கள் தொலைநோக்குகொண்டதும், விசாலமுமானதாயிருந்தன. கலகத்தை அடக்குவது மாத்திரம் அல்ல, கலகத்தின் இயல்பை பிரபஞ்சம் முழுவதற்கும் விளக்கிக்காட்டுவது அவருடைய நோக்கமாயிருந்தது. அவருடைய நியாயத்தையும் இரக்கத்தையும் காண்பித்து, தீமையைக் கையாள்வதில் அவருடைய ஞானத்தையும் நீதியையும் தேவனுடைய திட்டம் வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. (19)

பூமியின்மேல் நடைபெறும் சம்பவங்களை மற்ற உலகத்தின் பரிசுத்தவாசிகள் ஆழமான ஆர்வத்தோடு கவனித்துக்கொண்டிருந்தனர். கிறிஸ்துவின் அதிகாரத்தை நிராகரித்து, தேவனுடைய பிரமாணங்களை புறம்பாக்கி, பரலோகத்தில் சாத்தான் ஸ்தாபிக்க முயற்சித்த நிர்வாகத்தின் விளைவுகளை ஜலப்பிரளயத்துக்குமுன்பு பூமியில் இருந்த நிலைமைகளில் விளக்கப்படுவதை அவர்கள் கண்டார்கள். ஜலப்பிரளயத்திற்குமுன்பு வாழ்ந்த மிக ஓங்கின பாவிகளில் சாத்தான் யார்மேல் ஆட்சிசெய்தானோ, அப்பிரஜைகளை கண்டார்கள். மனிதனுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாயிருந்தது (ஆதி. 6:5). ஒவ்வொரு உணர்வும், ஒவ்வொரு துடிப்பும் நினைவும் தெய்வீக கொள்கைகளான தூய்மை, சமாதானம் மற்றும் அன்போடு போரிட்டது. சாத்தானுடைய கொள்கையான—தேவனுடைய சிருஷ்டிகளிலிருந்து அவருடைய பரிசுத்த சட்டங்களின் கட்டுப்பாட்டை நீக்குவதினால் விளையும் பயங்கரமான சீரழிவிற்கு அது உதாரணமாக இருந்தது. (20)

சாத்தானாலும் அவனால் வஞ்சிக்கப்பட்டிருக்கிற அனைவராலும் பொய்யாக்கப்பட்ட தேவனுடைய அரசாங்கச் சட்டங்களின் கொள்கைகளை மாபெரும் போராட்டத்தில் திறக்கப்பட்ட உண்மைகளின் வழியாக தேவன் விளக்கிக் காண்பிப்பார். கலகக்காரனை காப்பாற்றக்கூடாதபடி மிகத் தாமதமாக ஒப்புக்கொள்ளப்பட்டாலும், முழு உலகத்தாலும் அவருடைய நியாயம் ஒப்புக்கொள்ளப்படும். படிப்படியாக முழுமையான நிறைவேறுதலை நோக்கி அவருடைய மாபெரும் திட்டம் முன்னேறும்போது, தேவன் அண்டசராசரத்தின் அனுதாபத்தையும் ஒப்புதலையும் தம்மோடு கொண்டுசெல்கிறார். கலகத்தை கடைசியாக அழிக்கும்போதும் தேவன் அதை தம்மோடு கொண்டுசெல்வார். தெய்வீக கட்டளைகளை விட்டுவிட்ட அனைவரும் கிறிஸ்துவிற்கு எதிராக தங்களை சாத்தானின் பக்கம் வைத்திருந்தது காணப்படும். இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டு, அவனோடு இணைந்திருந்த அனைவரும் அவனுடைய முடிவைப் பகிர்ந்துகொள்ளும்போது, பிரபஞ்சம் முழுவதும் அந்தத் தீர்ப்புக்குச் சாட்சியாக "பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி. 15:3) என்று அறிவிக்கும். (21) ★